பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
26 01 2025 6 45
ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் 76வது குடியரசு தினம் நாடு முழுவதும் இன்று கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது.

2. பத்ம விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் உயர்கல்வி பயிலும் பெண்களின் எண்ணிக்கை 70 சதவீதமாக உயர்ந்துள்ளது என சட்டப்பேரவைத் தலைவர் திரு. அப்பாவு தெரிவித்துள்ளார்.

4. எல்லைதாண்டி மீன்பிடித்ததாக கூறி ராமேஸ்வரம் மீனவர்கள் 33 பேர் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

5. இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் 2 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

நாட்டின் 76வது குடியரசு தினம் நாடு முழுவதும் இன்று கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது.

புதுதில்லி கடமைப்பாதையில் நடைபெறும் நிகழ்ச்சியில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்கிறார்.

இந்தோனேஷிய அதிபர் திரு. பிரபாவோ சுவியாந்தோ இந்த ஆண்டு குடியரசு தின விழா சிறப்பு விருந்தினராக பங்கேற்கிறார்.

தேசிய நிகழ்வுகளில் மக்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்யும் விதமாக, குடியரசு தின அணிவகுப்பை சிறப்பு அழைப்பாளர்களாக பார்வையிட பஞ்சாயத்து அமைப்புகளின் தலைவர்கள், கைவினைக் கலைஞர்கள், விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டப் பயனாளிகள் உள்ளிட்ட 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை ஊக்கமளிப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

குடியரசு தினத்தையொட்டி குடியரசுத்தலைவர் ஆற்றிய உரையை தமது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள பிரதமர், இந்த உரையில் குடியரசுத்தலைவர் பல்வேறு அம்சங்களை சுட்டிக்காட்டி இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக நமது அரசியல் சாசனத்தின் சிறப்புகளையும், நாட்டின் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து பாடுபட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இருப்பதும் வரவேற்கத்தக்கது என பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பத்ம விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், விருது பெறுவோரின் அசாதாரண சாதனைகளை கௌரவித்து கொண்டாடுவதில் நாடு பெருமிதம் அடைவதாக கூறியுள்ளார்.

விருது பெறும் ஒவ்வொருவரும் கடின உழைப்பு, ஆர்வம் மற்றும் புதுமை முயற்சிகளை மேற்கொண்டவர்கள் என்று குறிப்பிட்டுள்ள பிரதமர், அவர்களது செயல்பாடு, வாழ்க்கையில் அளவற்ற நேர்மறை தாக்கங்களை ஏற்படுத்தி இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

வாழ்க்கையில் சிறந்து விளங்குவதோடு, தன்னலமற்ற வகையில் சமுதாயத்திற்கு சேவையாற்ற வேண்டும் என்பதை அவர்கள் நமக்கு உணர்த்துவதாகவும், திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன், தமிழகம், புதுச்சேரி மற்றும் ஆந்திராவில் இருந்து பத்ம விருது பெறுபவர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

விருது பெறுவோர் ஒவ்வொருவரின் சாதனைகள் மற்றும் சிறப்புகளையும் அவர் பட்டியலிட்டுள்ளார்.

26 01 25 6 45 பத்ம விருது – வாழ்த்து - 2

தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், தமிழகத்தில் இருந்து பத்மபூஷன் மற்றம் பத்மஸ்ரீ விருதுகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர்கள், அவரவர் துறைகளில் மென்மேலும் உயரங்களை அடைந்து தமிழ்நாட்டுக்கு பெருமை சேர்க்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

இந்தியா தனது 75 ஆண்டுக கால குடியாட்சியில் வலிமையான, வளமான நாடாக உருவெடுத்துள்ளது என மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள குடியரசு தின வாழ்த்துச் செய்தியில், விவசாயம், விளையாட்டு, விண்வெளி என பல்வேறு துறைகளிலும் நாடு குறிப்பிடத்தக்க சாதனைகளை படைத்திருப்பதாக கூறியுள்ளார்.

நாட்டின் ஜனநாயக நடைமுறைகளில் தங்களது பங்களிப்பை அதிகரிக்க நாட்டு மக்கள் அனைவரும் உறுதியேற்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டிற்கு சுதந்திரம் பெற்றுத்தரவும், அரசியல் சாசனத்தை உருவாக்க பாடுபட்ட தலைவர்களின் பங்களிப்புகளையும் திரு. ஓம் பிர்லா நினைவுகூர்ந்துள்ளார்.

<<<<>>>>

சுய உதவிக் குழுக்களில் இடம்பெறும் பெண்களின் எண்ணிக்கை கடந்த 10 ஆண்டுகளில் வெகுவாக அதிகரித்துள்ளது என்று மத்திய ஊரக வளர்ச்சித்துறை இணையமைச்சர் திரு. சந்திரசேகர் பெம்மசானி கூறியுள்ளார்.

குடியரசு தினத்தையொட்டி புதுதில்லியில் நேற்று நடைபெற்ற 'வலிமையான சமுதாயம், வலிமையான லட்சாதிபதி சகோதரி' எனும் தலைப்பிலான நிகழ்ச்சியில் பேசிய அவர், சுய உதவிக் குழுக்களில் 10 கோடிக்கும் அதிகமான பெண்கள் உறுப்பினராக உள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்தக் குழுக்களின் மூலம் பயனடைந்து லட்சாதிபதி சகோதரிகளாக உருவெடுத்துள்ள அவர்கள், நாட்டின் பொருளாதாரத்திற்கு வலிமை சேர்ப்பவர்களாக உள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிராமப்புற பொருளாதாரம்தான் நாட்டின் வலிமையாக திகழ்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

பெண்கள் வருவாய் ஈட்டுவதன் மூலம் கிராமங்களில் ஏற்படும் முன்னேற்றம் ஒட்டுமொத்த நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிவகுப்பதாகவும் திரு. சந்திரசேகர் பெம்மசானி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

எல்லைதாண்டி மீன்பிடித்ததாக கூறி ராமேஸ்வரம் மீனவர்கள் 33 பேர் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது இவர்கள் கைது செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மீனவர்களின் 3 படகுகளும் இலங்கைப் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் உயர்கல்வி பயிலும் பெண்களின் எண்ணிக்கை 70 சதவீதமாக உயர்ந்துள்ளது என சட்டப்பேரவைத் தலைவர் திரு. அப்பாவு தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் பள்ளி நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், 2035ஆம் ஆண்டுக்குள் 50 சதவீதம் பெண்களை பட்டதாரியாக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ள நிலையில் தமிழகத்தில் 2 ஆண்டுகளுக்கு முன்பாகவே 51 சதவீதம் பெண்கள் பட்டதாரி ஆகியிருப்பதாக கூறினார்.

மேலும் வேலைக்குச் செல்லும் பெண்களும் தமிழ்நாட்டில் அதிகம் இப்பதாகவும் திரு. அப்பாவு குறிப்பிட்டார்.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

பீஜிங்கில், ராமாயண கதை அடிப்படையிலான, 'ஆதி காவியம் - முதல் பாடல்' என்ற நாட்டிய நாடகத்தை அரங்கேற்றி சீன நடனக் கலைஞர்கள் சாதனை படைத்துள்ளனர்.

<<<<>>>>

பாகிஸ்தானின் கைபர் பக்துன்குவா மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட 3 தேடுதல் வேட்டைகளில் 30 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

குடியரசு தினத்தையொட்டி நாட்டின் எல்லைப் பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் மகா கும்பமேளாவை ஒட்டி நடத்தப்பட்ட கண்கவர் டிரோன் காட்சிகள் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது.

<<<<>>>>

தமிழகத்தைச் சேர்ந்த திரு. ராமலிங்கம் என்பவர் கடந்த 2019ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட வழக்கில், தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த 2 பேரை தேசிய புலனாய்வு முகமை கைது செய்துள்ளது.

<<<<>>>>

சைபர் குற்றங்கள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நீலகிரி மாவட்ட காவல்துறை சைபர் பள்ளிக்கூடம் என்ற புதிய திட்டத்தை தொடங்கியுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தை ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக் இல்லாத மாநிலமாக மாற்றுவதற்கான முயற்சியில் மக்கள் அனைவரும் பங்கேற்குமாறு தமிழ்நாடு மாசுக் கட்டுபாபட்டு வாரியம் கேட்டுக்கொண்ள்ளது.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே சேஷ நதியின் குறுக்கே சுமார் 8 கோடி ரூபாய் செலவில் புதிய அணைக்கட்டு அமைக்கும் பணிகளில் ஆட்சியர் திரு. பிரசாந்த் தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

நெல்லை, தென்காசி , தூத்துக்குடி மாவட்டங்களில் தாமிரபரணி வடிகால் பகுதி நீர்வாழ் பறவைகள் கணக்கெடுப்பு பணி தொடங்கியுள்ளது.

<<<<>>>>

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அருகே விளைநிலங்களுக்கு வரும் வனவிலங்குகளை வேட்டையாட வைக்கப்பட்டிருந்த நாட்டு வெகுண்டு வெடித்ததில் இருவர் படுகாயமடைந்தனர்.

<<<<>>>>

பெரம்பலூர் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக் கூட்டம் ஆட்சியர் திரு. கிரேஸ் பச்சாவ் முன்னிலையில் நடைபெற்றது.

<<<<>>>>

நாமக்கல் மாநகராட்சியில் நெகிழி விழிப்புணர்வு இயக்கத்தை ஆட்சியர் டாக்டர் உமா தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் 2 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது.

சென்னையில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய இங்கிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 165 ரன் எடுத்தது.

166 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்தியா, 19 புள்ளி 2 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 166 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

திலக் வர்மா அதிகபட்சமாக 72 ரன் எடுத்தார்.

<<<<>>>>

**Nantes** சர்வதேச தடகள போட்டியின் தடை தாண்டும் ஓட்டத்தில் இந்தியாவின் **Jothi Yarraji** தங்கப்பதக்கம் வென்றார்.

பிரான்சில் நடைபெற்ற இப்போட்டியின் 60 மீட்டர் மகளிர் பிரிவு இறுதி ஆட்டத்தில் அவர் 8 புள்ளி பூஜ்ஜியம் நான்கு வினாடிகளில் கடந்து தேசிய சாதனையும் படைத்ததார்

லக்ஸம்பர்கில் நடைபெற்ற தடகள போட்டியின் ஆடவர் தடைதாண்டும் ஓட்டத்தில் **Tejas Shirse** வெண்கலப் பதக்கம் வென்றார்.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் கோவா அணி 2-0 என்ற கோல் கணக்கில் சென்னை அணியை வென்றது.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் மும்பை – மேற்குவங்க அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

<<<<>>>>

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் குணசிகா அணி 4-2 என்ற கோல் கணக்கில் தமிழக அணியை வென்றது.

ரூர்கேலாவில் நடைபெற்ற இப்போட்டியின் மற்றொரு ஆட்டத்தில் ஹைதராபாத் 3-1 என்ற கோல் கணக்கில் உத்தரப்பிரதேசத்தை வென்றது.

**<<<<The End>>>>**